

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 11.04.2026


# நிதானம் கெட்ட பழனிசாமி..

“தி.மு.க. ஆட்சியில வறட்சி வந்ததா? வெள்ளம் வந்ததா? புயல் வந்ததா? கொரோனா வந்ததா? ஒன்னும் வரலை. அப்படி வந்திருந்தா இந்த முதலமைச்சரே காணாது போயிருப்பாரு. இவரு அந்த கொரோனாவுலயே போயிருப்பாரு” என்று சொல்லிவிட்டு தலையைக் குனிந்து சிரிக்கிறார் தரம் கெட்ட பழனிசாமி.

**தரம் கெட்ட பழனிசாமி, தோல்வி பயத்தால் நிதானம் கெட்டு அலைகிறார். இவர் கெட்ட கேட்டுக்கு ஊர் ஊராகப் போய் வாக்கு கேட்கிறார்.**

**இதற்கு முதலமைச்சர் அளித்த பதில் நிதானமானது. உருக்கமானது. “கொரோனாவைப் பார்த்து நான் பயப்படவில்லை. கொரோனா வார்டுக்குள் அதற்கான உடையைத் தாங்கிச் சென்றவன் நான். இப்படிப் போக வேண்டும் என்று நான் யாருக்கும் முன்கூட்டியே சொல்லவில்லை. யாரிடமும் சொல்லாத ஒன்றை இன்று சொல்கிறேன்... இதைத் தெரிந்து என் மனைவி துர்காவதி என்னிடம் கோபித்துக் கொண்டு ஒரு வாரம் பேசவில்லை. இது சத்தியம்” என்று சொன்னார். விழுப்புரம் கூட்டத்தில் இதைக் கேட்ட போது பலரும் அழுதார்கள். இந்த உரை வீடியோவாகப் பரவி பலரையும் கலங்க வைத்தது.**

உடனே, பொய்மூட்டை பழனிசாமி, ‘நான் அப்படிப் பேசவில்லை, கொரோனா காலத்தில் அவரைக் காணவில்லை’ என்று மழுப்பி இருக்கிறார் பழனிசாமி. அவர் வண்டி வண்டியாகப் பொய் சொல்வார் என்பது ஊர் அறிந்ததே ஆகும். மாட்டிக் கொண்டதும், பச்சையாகச் சொல்கிறார். பழனிசாமி பேசியதற்கு வீடியோ ஆதாரங்கள் இருக்கிறது.

“தி.மு.க. ஆட்சியில வறட்சி வந்ததா? வெள்ளம் வந்ததா? புயல் வந்ததா? கொரோனா வந்ததா? ஒன்னும் வரலை. அப்படி வந்திருந்தா இந்த முதலமைச்சரே காணாது போயிருப்பாரு. இவரு அந்த கொரோனாவுலயே போயிருப்பாரு” என்பது பழனிசாமி சொன்னது. அவர் சொன்னது வீடியோவாகவும் இருக்கிறது. ஊர், உலகம் பார்த்ததையே மாற்றுகிறார் பழனிசாமி.

பொதுவாகவே யாரையும் எடுத்தெறிந்து ஒருமையில் பேசுவதுதான் பழனிசாமிக்கு பழக்கம். தன்னை ஏதோ பெரிய பண்ணையாராக நினைத்துக் கொண்டு மற்றவர்களை கொத்தடிமைகளாக நினைப்பது அவரது வழக்கம். சசிகலா காலைப் பார்த்து ஊர்ந்து போய் காலைத் தொட்டு வணங்கி அங்கேயே விழுந்து கிடந்த மானம் கெட்ட பழனிசாமி, சசிகலா சிறைக்குப் போனதும் ‘நீ ஏன் சொந்தம் கொண்டாடுகிறாய்? நீ எனக்கு பதவி வாங்கிக் கொடுத்தியா?’ என்று ஒருமையில் கேட்டார். அரசியலில் ஒன்றாக இருந்தவர் பிரிவதும், அவர்கள் ஒருவருக்கொருவர் விமர்சித்துக் கொள்வதும் வழக்கம். ஆனால் இப்படி ஒருமையில் தலைவர்கள் பேசிக் கொள்வது இல்லை. அதனைச் செய்தவர் தான் பழனிசாமி. அதே போலத்தான் தினகரனையும் திட்டினார்.

பொதுவாகவே பல நேரங்களில் முதலமைச்சர் குறித்து விமர்சிக்கும் போது ஒருமையில் பேசி இருக்கிறார் பழனிசாமி. அதைப் பற்றி கூச்சப்படும் ரகம் அல்ல பழனிசாமி. ஒரு மாநிலத்தின் முதலமைச்சரை ஒருமையில் பேசுகிறோமே என்ற எண்ணம் அவருக்கு இருந்தது இல்லை. அந்தளவுக்கு பண்ணையார்த் தனம். ஆணவம். திமிர்த்தனம். யார் நம்மைக் கேட்பார்கள் என்ற எகத்தாளம். அன்றைக்கே தமிழ்நாட்டு ஊடகங்கள் அதனைக் கண்டித்திருக்க வேண்டும். யாரும் அதனைக் கண்டிக்கவில்லை.

இப்போதுகூட தலைவர் கலைஞரை, ‘உங்க அப்பாரு’ என்றுதாம் விளிக்கிறார் பழனிசாமி. 80 ஆண்டு பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரர், 50 ஆண்டுகள் ஒரு அரசியல் இயக்கத்தின் தலைவர், ஐந்து முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர், தமிழ்நாட்டு வரலாற்றில் அதிக ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர், அதிகக் கோப்புகளில் கையெழுத்து இட்டவர், பல பிரதமர்களை உருவாக்கியவர், பல குடியரசுத் தலைவர்களை உட்கார வைத்தவர், இந்தியாவில் பல முறை ஆட்சி மாற்றத்துக்குக் காரணம் ஆனவர், 95 வயது வரை இம்மண்ணுக்காகவும், மக்களுக்கும், மொழிக்கும் வாழ்ந்த கலைஞரை, ‘உங்க அப்பாரு’ என்று சொல்வதற்கு தடித்த தோலும், உடம்புக் கொழுப்பும்தான் காரணம்.

**கலைஞர், கோடிக்கணக்கான தமிழர்களால் அப்பாவாக, அண்ணனாக, ஏற்றுக் கொள்ளப்பட்டவர். பழனிசாமியைப் போல சொந்தக்கட்சிக் காரர்களால் புறக்கணிக்கப்பட்டவர் அல்ல. கூட இருப்பவர்கள் எப்போது குழி பறிப்பார்கள் என்று நித்தமும் செத்துப்பிழைக்கும் பழனிசாமி, கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர் பெயரையே உச்சரிக்கத் தகுதி இல்லாதவர்.**

**கொரோனா காலத்தில் ஊரடங்கு போட்டுவிட்டு சேலத்தில் முடங்கிக் கிடந்த உதவாக்கரைதான் பழனிசாமி. திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகள் அத்தனை பேரையும், ‘ஒன்றிணைவோம் வா’ என்று அழைத்து வாழ்வாதாரம் இழந்து கிடந்த மக்களுக்கு உதவச் சொன்னவர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின். தி.மு.க. உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் வீட்டுக்குள் இல்லை. வீதியில் மக்களுக்கு உதவி வந்தார்கள். உணவு கொடுத்தது தி.மு.க. உணவு தயாரித்துக் கொடுத்தது தி.மு.க. அனைத்து உதவியையும் செய்தது தி.மு.க. பழனிசாமி, மிக்சர் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்.**

“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்” என்று பதவிப் பிரமாணம் எடுத்துவிட்டு கோட்டைக்கு வந்த முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் ஐந்து கையெழுத்தில் இதுவும் ஒன்று; என்ன என்றால், “அனைத்துக் குடும்பத்துக்கும் கொரோனா நிதியாக 4 ஆயிரம் வழங்குவேன்” என்பதுதான்.

**வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். கடைசி வரைக்கும் பழனிசாமி தரவில்லை. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் முதலில் 2 ஆயிரம், பின்னர் 2 ஆயிரம் வழங்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். முதலில் 22 மளிகைப் பொருட்களையும் பின்னர் 14 மளிகைப் பொருள்களையும் 2 கோடி குடும்பங்களுக்கு வழங்கினார் முதலமைச்சர் அவர்கள். கொரோனாவை வென்றவர் மட்டுமல்ல கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்த மக்களின் வாழ்க்கையையும் மீட்டுத் தந்தவர்தான் முதலமைச்சர் அவர்கள்.**

பழனிசாமி ஆட்சி தொடர்ந்திருந்தால் கொரோனாவுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கவே முடியாது. மக்கள் மரணிப்பதைப் பார்த்தும் ‘மிக்சர்’ சாப்பிட்டுக் கொண்டு இருந்திருப்பார் பழனிசாமி. இவ்வளவு தோல்விக்குப் பிறகும் பழனிசாமிக்கு உடம்புத் திமிர் அடங்கவில்லை. மே முதல் வாரத்தில் மொத்தமாக திமிர் அடங்கிவிடும்.

●●

# மெட்ரோ ரயில் திட்டம் - நான் உருவாக்கப் பாடுபட்ட நாட்களின் நினைவுகளுடன் ஒரு பயணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சிப் பதிவு!

**சென்னை, ஏப். 11-**

**தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.4.2026) சென்னை சென்ட்ரலிலிருந்து தேனாம்பேட்டை வரை மெட்ரோ ரயிலில் பயணித்து பொது மக்களிடம் வாக்குச் சேகரித்தார். இந்த நிகழ்வை சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ள முதல்வர் அவர்கள், மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வர தான் துணை முதல்வராக இருந்த போது ஜப்பான் நாட்டிற்குச் சென்று அந்தத் திட்டத்தை கொண்டு வந்ததை நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்துள்ளார்.**



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மக்களின் அன்பில் நனைந்த படியும், மெட்ரோ இரயில் திட்டம் உருவாகப் பாடுபட்ட நாட்களின் நினைவுகளைச் சுமந்த படியும் ஒரு பயணம்...

துணை முதலமைச்சராக இருந்தபோது, ஜப்பான் நாட்டிற்குச் சென்று JICA-வின் நிதி யுதவியைப் பெற்று வந்து, நான் முன்னின்று செய்த திட்டம்!

விம்கோ நகர் முதல் விமான நிலையம் வரையிலும், சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரையிலும் இயங்கிவரும் முதற்கட்டத் திட்டத்தில் இதுவரையில் கோடிக்கணக்கான பயணங்களை மக்கள் மேற்கொண்டுள்ளனர்.

அதிவேகமாக நடைபெற்று வரும் மாதவரம் - சிறுசேரி, கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி, மாதவரம் - சோழிங்கநல்லூர் இடையேயான இரண்டாம்கட்டத்திட்டப்பணிகளையும் விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு ஒப்படைப்போம்.

விமான நிலையம் - கிளாம்பாக்கம், கோயம்பேடு - பட்டாபிராம், பூந்தமல்லி - சுங்குவார்சத்திரம், தாம்பரம் - கிண்டி, கலங்கரை விளக்கம் - உயர்நீதிமன்றம், சிறுசேரி - கலைஞர் பன்னாட்டு அரங்கம் என மெட்ரோ விரிவாக்கப் பணிகளெல்லாம் நிறைவுறும்போது, இந்தியாவிலேயே மெட்ரோ வழியாக அதிக தூரத்தை இணைக்கும் நகரங்களுள் ஒன்றாகச் சென்னை விளங்கும்!

சென்னையை வளர்த்தெடுக்கும் நமது கனவு வெல்லட்டும்! வெல்வோம்_ஒன்றாக!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து

# டி.ஆர்.பாலு எம்.பி.யின் பரிந்துரையையேற்று - மருத்துவ நிதி உதவி!

## 10 பயனாளிகள் பயன் பெறுகின்றனர்!

*புதுடெல்லி, ஏப். 11-*

*திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்ற மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள், தனது திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்கள் பலரின் பல்வேறு மருத்துவ சிகிச்சைகளுக்காக, சில சிறப்பு சூழ்நிலைகளில் ஏழை மக்களுக்கு இதய அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை போன்ற பல்வேறு சிகிச்சைகளுக்கு, பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் பகுதி நிதியுதவியில் இருந்து “25 லட்சம் ரூபாய்“ பெற்றுத் தந்துள்ளார்.*

*அதன் விபரம் பின்வருமாறு:-*

*அம்பத்தூர் மற்றும் பல்லாவரம் பகுதிகளைச் சேர்ந்த லோகநாதன் மற்றும் நல்லதம்பி ஆகியோரது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காகவும், செங்கல்பட்டு மாவட்டம், திரிசூலம் பகுதியைச் சேர்ந்த இராமதாஸ், பல்லாவரத்தைச் சேர்ந்த திருமதி சரினா, குன்றத்தூர் பகுதியைச் சேர்ந்த சிறுவன் தர்ஷித், திருப்பெரும்புதூர், ஆர்.பி.சத்திரம் பகுதியைச் சேர்ந்த திருமதி சாவித்திரி, குரோம்பேட்டையைச் சேர்ந்த முருகன், அம்பத்தூர் பகுதியைச் சேர்ந்த திருமதி அலமேலு மற்றும் தாம்பரம் பகுதியைச் சேர்ந்த திருமதி லாவண்யா ஆகியோரது புற்றுநோய் சிகிச்சை களுக்காகவும், அம்பத்தூர் பகுதியைச் சேர்ந்த சவரிமுத்து என்பவரது இதயநோய் சிகிச்சைக்காகவும் பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு முறையே ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித்தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.*



*டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து நல்லதம்பி அவர்களின் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக இரண்டு லட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாயும், லோகநாதன் அவர்களின் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக மூன்று லட்சம் ரூபாயும், இராமதாஸ், முருகன், சிறுவன் தர்ஷித் ஆகியோரின் புற்றுநோய் சிகிச்சைகளுக்காக தலா மூன்று லட்சம் ரூபாயும், திருமதி சரினா, திருமதி சாவித்ரி, திருமதி அலமேலு மற்றும் திருமதி லாவண்யா ஆகியோரின் புற்றுநோய் சிகிச்சைகளுக்காக தலா இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும், சவரிமுத்து அவர்களின் இதயநோய் சிகிச்சைக்காக ஐம்பதாயிரம் ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.*

*இது விஷயம் தொடர்பாக டி.ஆர்.பாலு,எம்.பி. அவர்களுக்கு பிரதமர் அலுவலகம் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் பின் வருமாறு:*

*பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, மருத்துவ சிகிச்சைகளுக்காக வழங்கப்படும் உதவித் தொகையானது மேற்கண்ட பயனாளர்கள் சிகிச்சை பெறும் பிரதமர் தேசிய நிவாரண நிதி யின் கீழ் பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளான புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, கோயம்புத்தூர் கிட்னி சென்டர் & ஸ்பெசாலிட்டி ஹாஸ்பிடல்ஸ், சென்னை அடையாறு புற்றுநோய் மையம் மற்றும் சென்னை மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் ஆகிய மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிவடைந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலைப் பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்கண்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளரும், கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு மேற்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த பிரச்சாரத்தின் போது மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் முத்துச்செல்வம், விஜய் ஜெயராஜ், ராமதாஸ், புஷ்பராஜ், தொ.மு.ச. அமைப்பாளர் குணசேகர், வழக்கறிஞர்கள் கவியரசன் அந்தோணி ஷீலா, மோகன்தாஸ், பி.ஆர். பாலசுப்ரமணியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, முன்னாள் கவுன்சிலர் கவிதா, சோழன், சம்பத், முத்து, பழனி, ராதாகிருஷ்ணன், கருணாமூர்த்தி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த தச்சம்பட்டு, அல்லிகொண்டாப்பட்டு, சின்னக்கல்லப்பாடி, பறையம்பட்டு, மேலத்திக்கான், தலையாம்பள்ளம் ஆகிய ஊராட்சிகளிலிருந்து 400க்கும் மேற்பட்ட அ.தி.மு.க., த.வெ.க.வினர் அக்கட்சிகளிலிருந்து விலகி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், ஏ.முத்துகுமார், க.சௌந்தரராசன், ஏ.ஏ.ஆறுமுகம், சி.சண்முகம், பா.ஷெரீப் உட்பட பலர் உள்ளனர்.